திருமறைக்கலாமன்றத்தின்

# முற்றம்

செய்தி இதழ்



ஆண்டு - 06





செல்வன் கௌதமன் தயாநிதி அவர்கள் கடந்த 05.05.2007ல் தமது நாட்டிய அரங்கேற்ற நிகழ்வை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

அவரை முற்றம் சார்பில் நாம் வாழ்த்துகின்றோம்.

வைகாசி - 2007

இதழ் - 02







## பின்னூட்டம்

ஐரோப்பியதமிழ் தொலைக் காட்சிகளில்....

எங்கள் இல்லங்களின் நடு விறாந்தாவில் அழகாக வீற்றிருக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஒளிபரப்பாகும் தமிழ் நிகழ்ச்சிகளில் கூடுதலான நேரங்களில் இந்தியத் திரைப்படங்கள்! அல்லது திரைப்படங்களில் வரும் பாடல்காட்சி அல்லது நகைச்சுவைக் காட்சிகளை அதற்கு தங்களது கற்பனையில் உதிக்கும் ஒரு பெயரைத் தலைப்பாக இட்டு ஒளிபரப்புவார்கள்! நிகழ்ச்சி ஒன்றுதான் ஆனால் தலைப்புக்கள்தான் வேறு வேறாக இருக்கும். சினிமா மட்டும் இல்லாவிட்டால் தொலைக்காட்சிகளெல்லாம் இழுத்து மூடப்பட வேண்டியவைதான். (வானொலிகளின் நிலையும் இதேதான்)

இவைதவிர அழுதுவடியும் நாடகங்களும் தங்கள் பங்கிற்கு எங்களின் நேரத்தையும் விழுங்கி மூளைகளையும் மழுங்கடித்துக் கொள்கின்றன!. இந்த நாடகங்களுக்குக் கதை எழுதுபவர்களுக்கு எப்படித்தான் இப்படியான கற்பனைகள் எல்லாம் உருவாகுகின்றதோ தெரியாது? எபிசோட்டுக்களை கூட்டுவதற்காக நம்பமுடியாத நிகழ்வுகளையெல்லாம் நாடகத்திற்குள் புகுத்தி பார்ப்பவர்களை முட்டாளாக்கிவிடுகின்றார்கள்!.

இவைகளையெல்லாம் கழித்துவிட்டு மீதியிருக்கின்ற சொற்ப நேரத்தில்த்தான் செய்தி மற்றும் நம்மவர்கள் பிரச்சனைகளைச் சொல்லும் கருத்துக்களம் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. மிஞ்சி மிஞ்சிப்போனால் இந்த நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்படும் நேரம் அதிகபட்சம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் இருக்காது!. பல லட்சக்கணக்கான டாலர்களை முதலீடு செய்து நடாத்தப்படும் தொலைக்காட்சிகள் நம்மவர்களுக்காக செய்யும் பங்களிப்பு இவ்வளவு மட்டும்தான்!.

இவைகளுக்கு மத்தியில் முழு நிலாக்காலத்திலும் நட்சத்திரங்கள் தெரிவதுபோல சில தரமான நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்குவதைப் பார்க்கும்போது அவைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

தீபம் தொலைக்காட்சியில் 'பிடிக்கல்லை பிடிக்கல்லை' என்னும் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். அற்புதமான சிந்தனை! தரமானதொரு நிகழ்ச்சி!. ஐரோப்பிய வாழ்க்கையில் எமக்குப் பிடிக்காத நிகழ்வுகள் எத்தனையோ நடக்கின்றன!. 'உங்களுக்குப் பிடிக்காத அப்படியான நிகழ்வுகளை எங்களுக்கு எழுதுங்கள்' என நேயர்களிடம் கேட்கின்றார்கள். பின்னர் அதை நாடகமாகத் தயாரித்து ஒளிபரப்புகின்றார்கள். உண்மையிலேயே நம்மவர்களால் நடாத்தப்படும் அயோக்கியத்தனங்கள் கலாச்சாரச் சீரழிவுகள் சுயநலச் சுரண்டல்கள் போலி நட்புக்கள் போலிப் பாசங்கள் இப்படியாக சமுதாயத்திற்குப் பிடிக்காத பல விடயங்கள் இந் நிகழ்ச்சியின் மூலமாக தோலுரித்துக் காட்டப்படுகின்றது. இது பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

இதுபோல ttn தொலைக்காட்சியில் தாயகத்து தயாரிப்புகள் சிலவற்றோடு அண்மைக்காலமாக 'கதை கதையாம்' என்றொரு நிகழ்ச்சியைத் தயாரித்து ஒளிபரப்புகின்றார்கள். இதுவும் பாராட்டப்படவேண்டிய ஒரு நிகழ்ச்சி.

நான்கு பேர்கள் கதைசொல்ல வருகின்றார்கள். இதில் விசேசமான அம்சம் என்னவென்றால் முதலாமவர் கதையை ஆரம்பித்து வைக்க மற்றைய மூவரும் தங்கள் கற்பனைத் திறத்தால் கதையை நகர்த்த வேண்டும்!. ஒருவருக்கு இரண்டு நிமிடமென இரண்டு சுற்றுக்களில் கதையை நிறைவு செய்துவிட வேண்டும். இவர்கள் கதை சொன்ன முறையை மறைந்திருந்து கவனித்த நடுவர் ஒருவர் முடிவில் இந்த நால்வரும் கதைகளை நகர்த்திய முறையைப்பற்றியும் அவர்கள் கதை கூறிய விதத்தில் உள்ள குறை நிறைகளைப் பற்றியும் கருத்துக்கூறுவார்.

இந்த நிகழ்வில் புது முகங்கள் பலர் கலந்து மிகஅற்புதமாக கதையை நகர்த்துபவர்களும் இருக்கின்றார்கள். அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட இரண்டு நிடங்கள் கதை சொல்வதற்கு சிரமப்பட்டு தடுமாறுபவர்களும் இருக்கின்றார்கள். அந்தத் தடுமாற்றத்தில் நாம் தவறுகாண முயலக்கூடாது? தடுமாற்றமடைந்தாலும் புதிய எழுத்தாளர்கள் உருவாவதற்கு இந் நிகழ்ச்சி ஒரு தளமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கதை சொல்வதற்கு தடுமாறும் அப்படியான சிலரை அந்த நிகழ்ச்சியோடு நிறுத்திவிடாமல் தொடர்ந்தும் அவர்களுக்கச் சந்தர்ப்பம் வழங்கினால் நிட்சயமாக எழுத்துத் துறையில் பல புதியவர்களை உருவாக்கிய பெருமை ttnக்கு வந்து சேரும்.

இது போன்ற இன்னும் பல பயனுள்ள நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்கு தொலைக்காட்சி நிறுவனங்கள் சிந்திக்க வேண்டும். நாமும் எதற்கெடுத்தாலும் குறைகளை மட்டும் கூறிக்கொண்டிராது நல்லவை நடக்கும்போது பாராட்டிக் கொள்ளவும் வேண்டும்.

-நந்தினி

## பின்னூட்டம்

அண்மையில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் □இளையோர் உலகம் அழைக்கின்றது□ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடாத்தியது. புலம் பெயர் மண்ணில் இன்றைய பெற்றோர் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் சம்பந்தமாக பலர் தமது கருத்துக்களை வழங்கினர். அதில் சிலர் புலம்பெயர் மண்ணில் தமிழும் தமிழ்க் கலாச்சாரமும் அழியாது எனவும் வாதிட்டனர். எது எப்படியிருப்பினும் அடுத்த தலைமுறையில் தமிழும் தமிழர் கலாச்சாரமும் புலமபெயர் மண்ணில் இல்லாமல் போவது நிச்சயம். யதார்த்தமும் அதுதான். உதாரணமாக இன்றைய தலைமுறைப் பிள்ளைகள் பெற்றோர்களோடு தமிழில்பேசினாலும் தங்களுக்குள் பிரெஞ்சுமொழியில் பேசுவதையே விரும்பு கின்றனர்.இதுவே உண்மை. இந்நிலையில் நாளைய தலைமுறை தமிழைப் பேசுமா? கேள்விக்குறிதான். உண்மையைச் சொல்லப்போனால் தமிழ் வாழவேண்டுமாயின் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு இனிமேலும் இடம்பெயரக்கூடாது. அதற்கு நமது நாட்டில் தமிழர்களுக்கு அரசியல் விடுதலையும் அமைதியும் வேண்டும். அதை உணர்ந்து எமது நாட்டின் தலைவர்கள் இனியாவது நாட்டில் அமைதியைக் கொண்டுவர உழைப்பார்களா? -சுகி-

## பின்னூட்டம்

கடந்த இதழில் 'எமது இரசிப்புத் தன்மை எங்கே செல்கின்றது' என்ற தலைப்பில் வர்மன் எழுதிய கட்டுரையை வாசித்தேன். அவரது கருத்தோடு நானும் இசைந்தாலும் புதிய தலைமுறையினரின் கலை ஈடுபாடும், வளர்ச்சியும் முக்கியமானது. அவர்களை ஒழுக்கமுடைய இரசிகர்களாகவும், கலை ஞர்களாகவும் உருவாக்கவேண்டியது நமது கடமை. தமிழ் பண்பாட்டு விழுமியங்களை மறவாமல் அதை இணைத்து, இன்றைய காலத்திற்கேற்ப இளைஞர்களை உள்வாங்கி அவர்கள் இரசிக்கக்கூடிய கலையை அவர்களுக்கு அளிக்கவேண்டியதும் நமது பொறுப்பு. அதை புலம்பெயர் தமிழ் கலைஉலகம் அவர்களுக்கு அளிக்குமா?
அகிலன் பிரான்ஸ்-

## பின்னூட்டம்

உங்கள் முற்றம் வாசகர்களை நன்றாக வரவேற்கிறது. முற்றத்தில் கால் வைத்தவர்களும் கண் பதித் தவர்களும் திருப்தியுடன் திரும்புகிறார்கள்.
நன்றி.

பி.எஸ். அல்பிறெட்
இலங்கை

## எனக்கு பயமாயிருக்கு

வாழ்வாகி வரப்போகும்
முன்பின் அறியா முகம் காணா
மணாளனை நினைக்கையில்
எனக்கு பயமாயிருக்கு

துன்பப்படுத்தி, கொடுமைப்படுத்தி
வீட்டிற்குள் சிறைவைத்திருக்கும்
லண்டன் அக்காவின் புருசனைப்போல்
கோளையாய் இருப்பானோ....?

தமிழ்க்கடைப் பக்கம் தனியப் போகாத
கண்டபடி கதைக்காத, சிரிக்காத
இறுக்கமாக ஜீன்ஸ் போடாத,
ரீ சேர்ட் போடாத
தூங்கும் தோடுகள் போடாத என்று
நிபந்தனைகள் விதிக்கும்
பின் வீட்டக்காவின் புருசனைப்போல்
அமைந்துவிட்டால்....?

'கிறடிற்' முறையில்
சீதனம் கொடுத்து வாங்கிய
என் கனடா மைத்துனியின்
கணவரைப் போல்
கிறடிற் முடிந்தபின்
பிள்ளையைப் பெறுவமென்று
வரைமுறை, வழிமுறை வைத்து
வாழ்வதாய் நடிக்கும்
வேடதாரியாய் வரிவானோ...?

தள்ளி விழுத்திவிட்டு
தவறி விழுந்தாளென்று
முறைப்பாடு கொடுத்த
பக்கத்து தெருவிலிருக்கும்
பாமாவின் புருசனைப் போல்
வந்துவிட்டால்....

-ஈழநிதி-

தொடர்புகட்கு.
A.V.Damian. (Ese-6) 8-Bid- Raymond Poincare.
94170-Le Perreux-France

# இளையோர் உலகம்....

கடந்த 15.04.2007 ஞாயிறு பிற்பகல் மகாஜனா பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலும் மாறன் மணிக்கதைகள் 2 புத்தக வெளியீடும் சிறப்பாகவே நடைபெற்றன. பிற்பகல் 3.30 மணிக்கு மௌன அஞ்சலிக்கு பின் கல்லூரிக்கீதத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது. மாறன் மணிக்கதைகள் 2 வெளியீடுபற்றி அதன் எழுத்தாளரும் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கனடா கல்வி அமைச்சின் ரொறன்ரோ மாநில பல்கலை கலாச்சார அலுவலரும் ஆய்வாளருமான திரு ச.பொ.கனகசபாபதி அவர்கள் பின் வருமாறு கூறினார். இந்தப்புத்தகம் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இதற்கான பொருளுதவியினை தனது மாணவரான திரு குமார் அவர்கள் செலுத்தியதாகவும் குறிப்பிட்ட திரு கனகசபாபதி புத்தகத்தின் அட்டைப்படத்தினை தமக்குத் தெரியாமல் அச்சிட்டுவிட்டதாகவும் அதற்காகத் தான் வருந்துவதாகவும் குறிப்பிட்டார். அந்த நூலினை விமர்சிக்க வந்தவர்கள், அந்த நூலிலுள்ள குறைகளைத் தாராளமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் அதனைத் தான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறி தனது தொடக்க உரையை நிறைவு செய்தார்.

முதலில் விமர்சன உரையை நிகழ்த்திய ஐரோப்பிய எழுத்தாளர் சங்கத் தலைவரும் நாடகவியலாளருமான திரு அரியநாயகம் அவர்கள் இளம் சிறார்களுக்கான இந்தக் கதைகள் சிறப்பாக எழுதப்பட்டுளளதாகவும், ஆனாலும் அதில் கூறப்பட்ட சில தகவல்களை ஏற்றுக்கொள்வது கடினம் என்பதோடு பிரசுரித்த அச்சகத்தின் குறைகள் என்று சிலவற்றையும் குறிப்பிட்டார். ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் முதல் எழுத்தினை பெரிதாகப் போடவேண்டாம் என்றும் மேலதிகமான படங்கள் போடுவது சிறப்பாக இருக்கும் என்றும் கூறியமர்ந்தார். அடுத்து விமர்சித்த கவிஞரும் எழுத்தாளருமாகிய திரு மா.கி.கிறிஸ்ரியன் அவர்கள் தனது பார்வையில் இது விஞ்ஞானரீதியில் சிந்தித்து எழுதிய கதைகள். இது மிகச்சிறப்பாகவும் எளிமையாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டதோடு இளம் சிறார்களுக்கு ஓர் சிறந்த புத்தகம் என்றும் கூறியமர்ந்தார். தொடர்ந்து, ஆசிரியர் திருமதி அனக்ஸ்ராணி அவர்களும் நூலின் சிறப்புக்களையும் சமூக அக்கறையோடு நூலினை எழுதிய திரு கனகசபாபதி அவர்களையும் பாராட்டியமர்ந்தார். இறுதியாக விமர்சிக்க வந்த சமூக ஆய்வாளர் திரு முகுந்தன் அவர்கள் இன்றைய தமிழ் சிறார்களின் தமிழ்க்கல்வி சிதைந்து போகின்ற வேளையில் இந்த நூலானது அவர்களுக்கு பிரயோசனமாகவும் தமிழினை மிக எளிதாகக் கற்க உதவியாகவும் இருக்கும் என்று கூறியதோடு இதனைப் பிரெஞ்., இத்தாலி, ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளில்



வெளியிடுவதால் அந்தந்த நாட்டிலுள்ள தமிழை சரியாக வாசிக்க முடியாத சிறார்களும் பயன் படுத்தமுடியும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். இந்தப் புத்தகத்தில் கூறப்பட்ட கதைகள் அனைத்தும் சிறார்களுக்குரியதாக இருந்தாலும் இறுதியாக உள்ள 'குழந்தையும் துருவக்கரடியும்' என்ற கதை பெரியவர்களான பெற்றோர்களுக்கே என்பதை கூறினார்.

மாறன் மணிக்கதைகள் என்ற இந்தப் புத்தகத்தில் உள்ள சிறுவர்களுக்கான சிறுகதைகள் அனைத்தும் நன்றி மறவாதே என்ற ஒரு சொல்லின் மறுபிம்பமாகவே அமைந்துள்ளன. இந்தக் கதைகள் யாவும் ஆசிரியரின் கற்பனை என்றாலும் பிள்ளைகளால் நம்பக்கூடியனவாக அமைந்துள்ளது. ஆசிரியர் திரு கனகசபாபதி அவர்கள் ஓர் விஞ்ஞான ஆசிரியராகக் கடமை புரிந்தபடியால் இந்தக் கதைகளில் தனது அனுபவத்தினை மட்டுமல்லாது விஞ்ஞான உண்மைகளையும் சேர்த்து கதைகளை உருவாக்கியுள்ளார். ஆனபடியினால் இந்தக் கதைகளைப் படிக்கும் சிறார்கள், எமது சமூகத்தில் உள்ள புனைகதைகளில் எழும் சந்தேகங் களைப்போன்று சந்தேகத்தினை எழுப்பிக் கேள்விகள் கேட்க முடியாது. காரணம் அனைத்துக் கதைகளும் உண்மையானதாகவே தோன்றும்படி எழுதப் பட்டுள்ளது.

இந்த நூலின் விமர்சனங்களைக் கேட்ட திரு கனகசபாபதி அவர்கள், நூலைப்பற்றிய ஏற்புரையில் 'கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதற்கமைய தமது தவறுகளைக் காண்பித்து உரையாற்றியதை எல்லோரும் பாராட்டினார்கள். தொடர்ந்தும் அவரது ஆக்கங்களும் அறிவுரைகளும் எமக்குத் தேவை என்பதை எல்லோரும் ஏற்கும் வகையில் அவரைப் புகழ்ந்து பலரும் உரையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற இளையோர் உலகம் அழைக்கிறது கலந்துரையாடலை சிறப்பு விருந்தினர் திரு கனகசபாபதி அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அவர் கூறும்போது உலக மாற்றத்தோடு நாமும் சேர்ந்து போக வேண்டும் என்றாலும் பெற்றோர்களின்

தவறுகளே பிள்ளைகளோடு பெற்றோர்கள் ஒன்றிணைந்து செல்லமுடியாத நிலை எனக் குறிப்பிட்டார். அவருடைய கருத்தில் பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் தமது நேரத்தினை ஒதுக்கி அவர்களுடன் பொழுதைக் கழிக்க வேண்டும் என்றும் கூறினார் தொடர்ந்தும், சமூகத்தில் நாம் ஓர் அங்கம் என்ற வகையில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பல்வேறு குடும்ப அங்கத்தினர்களுடன் சேர்ந்து ஒன்றுகூடல் போன்ற நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதால் பிள்ளைகளும் பெற்றோர்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பாகும் என்றார். இக்கூற்றை பலரும் விரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது

சமூக அக்கறையுடன் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் திரு பாலகிருஷ்ணன், சென் பற்றிக்ஸ் பழைய மாணவர் திரு ஜெராட், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் திரு இரஜாகரன், மகாஜனா பழைய மாணவர் திரு முகுந்தன், திரு மனோ போன்றோர் தத்தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இதில் தமிழ் மக்களின் சமூக அமைப்பு முறை, மொழியின் மீதுள்ள பற்று போன்ற விடயங்கள் பற்றி காரசாரமான கருத்துக்களை பலரும் முன்வைத்தனர். இறுதியாக தொகுப்புரை வழங்கிய மகாஜனா பழைய மாணவரான திரு மனோ, இளையோர்கள் பெற்றோர்களை தமது வழிக்கு அழைப்பது நல்லதல்ல என்றும் பெற்றோர்களும் இளையவர்களும் புரிந்துணர்வோடு வாழ்ந்தால் பிரச்சனை எழுவதற்கு வாய்ப்பில்லை என்றார் இருந்தாலும் இன்றைய கலந்துரையாடலில் சரியான முடிவை நாம் எடுப்பதற்கு முடியவில்லை என்பதையும் கூறியதோடு தொடர்ந்து உரையாடுவதற்கு நேரம் போதாமையும் கவலையளிப்பதாக கூறினார்.

இளவாலை கன்னியர்கள் மடம் (கொன்வென்ற்) பழைய மாணவர்சங்க செயலாளர் திருமதி கலா லோகநாயகம் அவர்கள் இந்தக் கலந்துரையாடலை பெற்றோர்களுடன் இளைஞர்களும் பங்குகொண்டு கருத்துப்பரிமாறும் விதத்தில் தமது பழைய மாணவர்சங்கத்தின் சார்பில் தொடர்ந்து தாம் நடாத்தப்போவதாக கூறியதைப் பலரும் வரவேற்றார்கள். நாமும் அவர்களுக்கு ஒத்துழைப்பினை நல்கி சமுதாயத்திற்கு நன்மைதரும் செயல்களைச் செய்வோம்.

இரவு 8 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இனிதாகவே நிறைவடைந்தது.

-என்.வரதராஜன்-

# ஏடும் எழுத்தாணியில் முற்றம்!

*-வண்ணை தெய்வம்*

*ஜேர்மனியில் இருந்து இருபத்தி நான்கு மணிநேரமும் ஒலிபரப்பாகும் ஐரோப்பிய தமிழ் வானொலியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 11 மணியிலிருந்து 11-30வரை வண்ணை தெய்வத்தால் தயாரித்து ஒலிபரப்பாகும் 'ஏடும் எழுத்தாணியும்' என்னும் நிகழ்ச்சியில் 25-02-2007 ஞாயிறு தினம் அறிமுகமான "முற்றம" சஞ்சிகை பற்றிய அறிமுக நிழ்ச்சி.*

*இந் நிகழ்ச்சி சம நேரத்தில் கனடா சர்வ தேச தமிழ் வானொலி மூலமாக கனடாவில் காலை ஐந்து மணிமுதல் ஐந்து முப்பதுவரை ஒலிபரப்பாகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

சிற்றிதழ்கள். அண்மையில் வெளியான புதிய நூல்களின் வரவுகளைப்பற்றி தெரிந்துகொண்ட நாம் அடுத்து திருமறைக்கலாமன்றத்தின் திருக்கோணமலைக் கிளையினரின் 'கலை ஓசை' சஞ்சிகையையும். பிரெஞ்சுக் கிளையினரின் "முற்றம" சஞ்சிகையும் அறிமுகத்திற்காக இன்றையதினம் எடுத்துக்கொள்கின்றோம்.

'கலை ஓசை' சஞ்சிகையின் 2006 மார்கழி இதழே கடைசியாக வெளிவந்திருக்கின்றது. திருமறைக் கலாமன்றத்தின் திருக்கோணமலை இளையோர் சபையினரால் வெளியிடப்படும் இக் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் முகப்பு அட்டை சுனாப்பிப் பேரலையின் இரண்டாம் ஆண்டை நினைவு கூரும் விதமாக

மானிடங்களை அழித்து -எம்
வசந்தங்களைப் பறித்து
வந்து போய் இன்றுடன்
வருடம் இரண்டாச்சு

கடந்தாயே
யாவும் மறந்துனது
மடியேறி வருகின்றோம்-இனியேனும்
ஏதும் நிகழாமலப் பார்!

என்னும் கவிதை வரிகளோடு ஒரு தாய் குழந்தையைத் தோழில் சுமந்தபடி கடற்கரையில் காத்திருக்கும் காட்சியை ஓவியமாகச் சித்தரித்திருக்கின்றார்கள். இந்த அட்டைப்படத்தை கு.சுபாஸ்க்கரன் அவர்கள் வரைந்திருக்கின்றார். உள்ளே அமரராகிப்போன சு.வில்வரத்தினத்தின் 'எனது கண்ணாடி' 'ஒரு பறவையின் குளிர்த்திப்பாட்டு' ஆகிய கவிதைகளையும். சுனாமி சிறுகதை என பல ஆக்கங்களைச் சுமந்து வெளிவந்திருக்கின்றது.

கலை ஓசை சம்மந்தமான உங்கள் தொடர்புகட்கு. ஆசிரியர் 'கலை ஓசை' தர்சாலாயா 33/31 சிவபுரி. திருகோணமலை இலங்கை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.

நேயர்களே அடுத்து திருமறைக்கலா மன்றத்தின் பிரான்ஸ் கிளையினரின் 'முற்றம' சஞ்சிகையை அறிமுகத்திற்காக எடுத்துக்கொள்கின்றோம். 2007ம் ஆண்டு பிறந்த பின்னர் முதலாவது இதழாக வெளிவந்திருக்கின்றது முற்றத்தின் இருபத்தி ஐந்தாவது இதழ் இதுவாகும்.

ஐந்து ஆண்டுகளைக் கடந்து ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் முற்றத்தின் தை, மாசி, மாத இதழின் முதல் பக்கத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் திருமறைக்கலா மன்றம் பாரிஸில் நடாத்திய கலைவண்ணம் 2006ன் புகைப்படங்கள் பல பதிவாகியிருக்கின்றது. 2ம் பக்கத்திலும் 15ம் பக்கத்திலும் 'பின்னூ ட்டம்' என்னும் தலைப்பில் முற்றம் சஞ்சிகை பற்றியும் ஆதற்கு அப்பாலும் சென்று நல்ல நல்ல கருத்துக்களை எல்லாம் வாசகர்கள் பதிய வைத்திருக்கின்றார்கள். சுருங்கச் சொல்வதானால் சென்ற முற்றம் இதழில் கலைஞர் முத்து ஜெயசிக்கம் அவர்கள் தனது செவ்வியில் கூறிய கருத்துக்கு மறுப்புக்கருத்தில் இருந்து சதாம் உசேனைக் தண்டித்த விதத்தைக் கண்டித்தும் வாசகர்கள் கருத்துக்கள் எழுதியிருக்கிறார்கள்.
19-11-2006ல் நடைபெற்ற கலைவண்ணம் நிகழ்ச்சிபற்றி 03-12-2006ல் நடந்த விமர்சனக் கூட்டத்தின் விபரத்தைச் சுருக்கமாக எழுதியிருந்தார்கள். பாராட்டக்கூடிய அம்சம் இது. தம்மைத்தாமே சுய விமர்சனம் செய்வது தம்மைத் திருத்திக்கொள்வதற்கான முயற்சி என்று சொல்வார்கள். ஆனால் இப்படியான செயற்பாடுகள் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகள் என்று கூறுவதே பொருத்மாகும். சுய விமர்சனம் செய்வது சிறப்பான விடயம் என்றால் விமர்சனத்தின் கருத்துக்களை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவதற்கு ஒரு துணிவு வேண்டும்!. மிகத் துணிவோடு திருமறைக்கலாமன்றத்தினர் தங்களைப்பற்றிய விமர்சனத்தை மக்கள் முன் வைத்திருக்கின்றார்கள். இவ் விமர்சனச் செய்தியை யார் எழுதியவர் என்பதைக் குறிப்பிடவில்லை. ஆனால் சுருக்கமாச் சிறப்பாக எழுதியிருக்கின்றார்கள்.

இதே நேரத்தில் இந்தக கலைவண்ணம் பற்றிய செய்தியை 8ம் பக்கத்தில் வர்மன் என்பவரும். 11ம் பக்கத்தில் சிவலிங்கம் சிவபாலனும் தனித்தனியாக எழுதியிருப்பது ஏன் எனபதுதான் புரியவில்லை? இனி வருங்காலங்களில் இவர்கள் தங்களைப்பற்றிச் செய்யும் விமர்சனக் கூட்டத்தில் இதைப்பற்றியும் விமர்சனம் செய்யவேண்டும்.


4ம் 5ம் பக்கங்களில் பாரிஸில் நடந்த கலை நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். இதில் 5ம் பக்கத்தில்14-01-2006ல் திருமறைக்கலா மன்றம் நடத்திய பொங்கல் விழாபற்றி அவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரு பற்குணராஜா அவர்கள் எழுதியிருக்கின்றார். முக்கியமாக தான் அவ் விழாவில் பேசிய கருத்தையே முற்றத்திலும் பதிவு செய்திருக்கின்றார். அவ் விழாவில் தனிநடிப்பு செய்த சிறுமி செல்வி அஞ்சலி நந்தகுமார் மற்றும் நடனமாடிய செல்வி சௌவதனி- ஜெயக்குமார் ஆகியோரின் திறமைகளைப்பற்றி கொஞ்சம் விபராக எழுதியிருக்கலாம். அவர்களின் புகைப்படங்களைப் பிரசுரித்து அந்தச் சிறுமிகளைக் கௌர வித்திருக்கலாம் என்பது எமது கருத்து.

வன்னி இசி அவர்கள் எழுதியிரக்கும் 'நிதர்சனம்' என்னும் கவிதை யதார்த்தம் நிறைந்ததாக இருந்தது பாராட்டுக்கள். இலக்கியம் படைப்பவர்கள் இறந்து போனால் அவர்களைச் சுலபமாக மறந்துபோகும் இக் காலகட்டத்தில் அமரத்துவமடைந்த மறுமலர்ச்சிகால எழுத்தாளரான வரதர் என்று அழைக்கப்பட்ட திரு.வரதராஜன் அவர்களையும். கவிஞர் சு.வில்வரட்ணம் அவர்களையும் கௌரவித்து இரண்டு பக்கங்களை ஒதுக்கி அவர்களின் சிறப்புக்களையும் படைப்புக்களையும் பதிவு செய்திருக்கின்றார்கள். இதேபோல மறைந்த இசைக் கலைஞர் எஸ்.கே. பஞ்சரட்ணம் அவர்களைப்பற்றியும் 11ம் பக்கத்தில் அறிவிப்பாளர் எஸ்.கே. ராஜன் அவர்கள் எழுதியிருக்கின்றார். இவை அவர்களுக்குச் செய்த உயர்ந்த கௌரவமாகும்.

10ம் பக்கத்தில் 'தூங்காத கண்கள' என்னும் தலைப்பில் வரதன் அவர்கள் உண்மைச் சம்பவம் ஒன்றினை இரை மீட்டியிருக்கின்றார். தரமான சிறுகதை ஒன்றினைப் படித்தது போலிருந்தது. டேமியன் சூரி அவர்கள் தொடராக எழுதிவரும் 'வேர்களும் முகங்களும்' கடைசிப்பக்கத்தில் பதிவாகியிருக்கின்றது. வழமையாக கடைசிப்பக்கத்தில் பதிவாகும் 'அகதியாக ஆசைப்பட்டு' என்னும் தொடரைக் காணவில்லை.

சில குறைகளும் பல நிறைகளும் இருந்தபோதும் சிற்றிதழ் ஒன்று தொடராக ஐந்து ஆண்டுகளைத் தாண்டி வெளிவந்து கொண்டிருக்கின்றதே அதைப் பாராட்டுவோம். தொடர்ந்து ஆதரிப்போம்.

முற்றம் சம்மந்தமான உங்கள் தொடர்புகட்கு. A.V.Damian. (Ese-6) 8-Bid- Raymond Poincare. 94170- Le Perreux-France



# ஜோண்பியர் கார்சல், ஒரு கனவான் நடிகன்

21.04.2007 சனிக்கிழமை 'LE FIGARO" என்னும் பிரான்ஸ் நாட்டு வாரப் பத்திரிகையின் ஜோண் பியர் காசல் என்ற 'கனவான் நடிகன்' என்ற பொருளில் MARIE NOELLE TRANCHANT, JEAN LUC WACHTHAUSEN என்ற இரண்டு கட்டுரை ஆசிரியர்களால் வரையப்பட்ட ஒரு கட்டுரையின் கண்ணோட்டம்.

ஜோண் பியர் கார்சல் தனது 74வது வயதில் பாரீசில் காலமானார். இவரை வெறுமனே ஒரு நடிகன் என்ற வட்டத்துக்குள் அடக்கிவிடமுடியாது. பொதுமையான 'கலைஞன்' என்ற அடைமொழியுடன் அழைப்பதும் ஏற்புடையதாகத் தெரியவில்லை. முதலில் 'கலைஞன;' என்பவன் யார்....? 'நடிகன;' என்பவன் யார்...? என்ற தன்மைகள், அறுதியிட்டுக் கருத்துக்கள் முன்வைக்க, பட்ட அறிவு- பெற்றஅறிவு- கற்ற அறிவு என்ற முக்கூட்டு அறிவுகள் ஒரு வரையறையை எந்த அளவிற்கு கோடியிட்டு காட்டியிருக்கின்றன என்பவற்றுக்கு அப்பால்....

ஒரு நடிகன் நடிப்பதைவிட்டு தன் மனதில் பட்ட ஒரு சம்பவத்தை உண்மைநிலை சற்றேனும் குன்றாமல், மற்றவர்களுக்கு எடுத்தச் சொல்லும் செய்தியாக நடிகனையும் அவனின் நடிப்பையும் எடுத்துக்கொண்டாலும் கூட ஒரு வரையறை முழுமைபெற்றதாக எண்ணத் தோன்றவில்லை.

ஜோண் பியர் கார்சல் என்ற 'மனிதா;' பாரிசிலே 27.10.1932ல் பிறந்தவர். இவருடைய உண்மையான பெயர் ஜோண் பியர் குறோசோன் (CROCHON) என்பதாகும். குறோசோன் என்ற பெயர் பின்னர் □கார்சல்□ என்று மாறியமை, கலைஞர்களைக் கௌரவிக்கும் மக்கள் மன்றினால் தெரிவிக்கப்பட்ட பெயராகக் கொள்ளப்படுகிறது. இவருடைய தந்தையார் ஒரு மருத்துவர். தாயார் உலகத்தால் அறியப்பட்ட பாடகி. பாரம்பரிய இசைக்கு கோட்டை கோபுரமாகத் திகழும் 'OPERA" என்ற கலையரங்கத்தின் முடிசூட்டப்பட்ட இசையரசி. இதிலொரு வேடிக்கை என்னவென்றால் தந்தை மருத்துவன் என்றால் தன்பிள்ளையும் மருத்துவனாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கும், தாய் பாடகியென்றால் தன்மகளும் பாடகியாக வரவேண்டும் என்ற வற்புறுத்தல்களுக்கும் மாறாக இன்னொரு துறையை அல்லது அதே துறையின் இனனொரு பக்கத்தை தேர்ந்தெடுத்து அதிலே தன்னை நிரூபிக்கும் ஒரு தன்மையை இலகுவானதாக எண்ணமுடியாது.

ஜோண் பியர் அவர்களுக்குக் கைதேர்ந்த துறையாக நடிகன், பாடகன், நகைச்சுவைப் பாடகன், நகைச்சுவை நடிகர், நாடக ஆக்கத்திறன், தொழில்நுட்பத்திறன், படப்பிடிப்பு கருவியை கையாளுந்திறன், இயற்கை இசையை அரங்கத்தினுள் தரும் (NATURAL MELADIES) வல்லமை என்று அவருக்கு பின்னே அநேக திறமைகள் காத்துக்கிடக்க, அவர் தேர்ந்தெடுத்த அவற்றினுள் எல்லாம் தனக்குப்பிடித்த நாடக நடிப்பையே மேலாகக் கொண்டு வாழ்ந்தவர் என்ற பெருமையும் கொண்டிருக்கிறார்.

'GAINSBOURG" என்கின்ற பிரெஞ்சுப் பாடகரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. அவருக்கு பிரமாண்டமான இரு பக்கங்கள் உண்டு. உலகப் புகழ்பெற்ற 'கவிப்பாடகன்' என்ற பெயரைக் கொண்டவர். அவருடைய பாடல் வரிகளின் பொருளை, அதன் மொழியை இன்றை வரை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு பிரெஞ்சு அகராதியிலும் காணப்படாத கலைச்சொற்களை யெல்லாம் கையாண்டு தன் பாடலுக்கு மெருகூட்டியவர் இவர். இவரை இதுவரை யாரும் முந்தியதாக இல்லை.

ஜோண்பியர் அவர்களும் கெயின்ஸ்பேக் அவர்களும் மிக நெருங்கிய நண்பர்கள். கெயின்ஸ்பேக் அவர்களுடைய பாடல்களை அப்படியே எடுத்து தன்கருத்துக்களை புகுத்தி பாடுவதற்கு ஜோண்பியர் அவர்களுக்க கெயின்ஸ்பேக் அனுமதிகொடுத்திருந்த செய்திகூட இங்கு தெரியவந்திருக்கிறது. கெயின்ஸ்பேக் கவியுலகிலும் இசையுலகிலும் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர். அவருடைய கர்வம் கோடானுகோடி பார்வையாளர்களை தொலைக்காட்சியூடாக பிரமிக்கவும் வைத்திருக்கிறது, முகம் சுழிக்கவும் வைத்திருக்கிறது. 40வீதம் செறிவைக்கொண்ட அரசால் அனுமதிக்கப்பட்ட குடிவகைகளை விடவும் 60 வீதம் செறிவைக் கொண்ட குடிவகைகளைப் பாவிக்கவும், போதை மாத்திரைகளை உட்கொள்ளவுமென மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் அரசு அவருக்கு அனுமதியளித்தது

கெயின்ஸ்பேக் அவர்களுடைய மரணத்தின் போதான கவிதை வரிகள் கூட பின்னர் புத்தகமாக வெளிவந்தது 'நந்தவனத்துள் (மலர்க் குவியலுக்குள்) ஒரு கவிஞன்


உறங்க வைக்கப்பட்டிருக்கிறான;' என்ற வரிகள் பின்னாளில் பலராலும் உச்சரிக்கப்பட்ட வையாகும்.

உலகத்தால் நன்கு அறியப்பட்டவரும், முழுமைபெற்ற கலைஞனுமான (இவ் வரிகள் கட்டுரை ஆசியர்கள் கையாண்டவை) GENE KELLY என்பவர் ஜோண் பியர் அவர்களை 1950ம் ஆண்டு சந்திக்க நேர்ந்ததாம். அப்போதே இவரை வைத்து ஒரு திரைப்படம் தயாரிக்க ஆவல் கொண்டதாகவும் பின்னர் அவரது ஆவல் 1958ல் பூர்த்தியானதாகவும் 'THE HAPPY ROAD" 'LA ROUTE DU BONHEUR"

என்ற திரைப்படம் ஜோண்பியர் அவர்களை முதன்முதலில் திரைத்துறைக்கு அழைத்துவந் ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் இத்திரைப்படத்தின் கருவை நாடக அரங்கத்தில் முதலில் ஜோண்பியர் மெல்லிசையுடன் கூடிய (Clasical au Théâtre) நாடகமாக அறிமுகப்படுத் தியிருந்தார். ஜோண் பியர் அவர்களின் இருபதாவது வயதில் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டது. பின்னர் பிரபல்யம் வாய்ந்த திரைத்துறை நிறுவனங்களால் சிறிய சிறிய பாத்திரங்களில் நடிக்கவும் செய்தார். அதுவும் பலதரப்பட்ட வற்புறுத்தலுடன் சமரசஞ் செய்துகொண்டே நடிக்கவுஞ் செய்ததாகக் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

திரைத்துறைக்கு முந்தியதும் ஆரம்பகால கலை முன்னெடுப்புகளுக்காக களம் அமைத்தது மான நாடக வடிவங்களில் உண்டான திருப்தியும் அதனுடனான நேசிப்புமே இவரை திரைத்துறையின் பால் அதிக நாட்டங்கொள்ள வைக்கவில்லை என்பதும் அறிய வருகிறது.

இவரது மகன் வின்சன் ஒரு புகைப்பட தொழில்நுட்பவியலாளர். (CAMERAMEN) அவரின் குருவும் ஆலோசகரும் கூட அவரது தந்தை ஜோண்பியர் தான். தனது தொழிலையே தனது மகனும் சாரக்கூடாது என்ற நோக்கமோ என்னவோ, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு துறையில் தம் முத்திரையைப் பதித்துள்ளார்கள். மிகவும் அமைதியான எளிமையான வாழ்வையே தனது இரண்டாவது தேர்வாகக் கொண்டிருந்திருக்கிறார் பொதுவாக ஒரு கலைஞனுக்கு வரக்கூடிய துன்ப துயரங்கள், ஏமாற்றங்கள், இழுத்துவிழுத்தும் நிலைகள், துரோகத்தனங்கள் என்று தன் முன் னேற்றத்துக்குக் குறுக்கே காணக்கிடைத்த அநேக வடுக்களையும், வேண்டாத செயல்களையும் கடந்துதான் 'நான் அந்த சிவப்புச் சூரியனைத் தொட்டேன்' என்று பலருக்கும் தன் விடாமுயற்சி யையும், தன்னம்பிக்கையையும் ஜோண்பியர் வலியுறுத்திக்கொண்டே இருந்தார் என கட்டுரை ஆசிரியர்கள் தமது செய்தியில் தெரிவித்திருக்கி றார்கள்.



ஒரு கலைஞனாகப் பட்டவனுக்கு புறச்சூழல் தரும் பரிசுகளும் பட்டங்களும் அவனை ஒரு மேதையாக்குவதற்குப் பதில் மனத்தில் கனத்தையும், அதனால் ஏற்படும் ஒருவித விரக்தியையும் கொண்டவனாகக் குறுகவைக்கிறது. இப்படிப்பட்ட நிலைகளையும் தாண்டி ஒருவன் 'கலைஞன்' என்ற மகுடத்தை பெறுவதென்பது ஓரிருவர் மட்டுமே அதற்கு உரித்தானவர்கள் என்ற வரையறைகளையும் தாண்டி மேற்கொளள வேண்டிய கடின உழைப்பா, காலத்துடன் இணைந்த கருத்தினை விதைப்பதா என்பவற்றை அளந்து அறிந்து மேற்கொள்ள வேண்டுமா என்றெல்லாம் மனம் கேள்விகளை எழுப்புகிறது.

கலைஞர்கள் காலத்தையும் கடந்து வாழ்பவர்கள். அவர்கள் விட்டுச்செல்லும் செய்திகள் கால மாற்றத்திற்கேற்ப
மாறுபட்டாலும் அன்றைய பொழுதுகளை அவர்கள் நன்கு அளந்தே வைத்திருக்கிறார்கள். அவைதான் அவர்கள் பற்றிய செய்திகளை உலகுக்குதத் தந்து கொண்டிருக்கின்றன. கலைஞன் பிறப்பதில்லை. இச்சமுதாயம் அவனைக் கலைஞனாக உருவழிக்கிறது. அவனது தெரிவும் திறமையும் அவனை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது. 'மறைந்தும் மறையாதவர்கள் கலைஞர்கள்'.

**-சிவலிங்கம் சிவபாலன்.**

## 'வான்மதி' பிரெஞ்சு தமிழ்கலாச்சார நட்புறவுக் கழகம் நடாத்தும்

# கலைநிலா

பிரெஞ்சு தமிழ் மக்களை இணைத்து 'வான்மதி' பிரெஞ்சு தமிழ் கலாச்சார நட்புறவுக் கழகம் ஆண்டுதோறும் நடாத்திவரும் 'கலைநிலா' என்னும் நிகழ்ச்சியின் 2007வது ஆண்டுக்கான நிகழ்வு கடந்த 22-04-2007ல் பாரிஸில் மரிச்சேஸ் என்னும் இடத்தில் நடைபெற்றது.

பல்லின மக்கள் கலந்துகொள்ளும் நடன நிகழ்ச்சிகளுடன் 'எப்படி எரிகின்றோம்'என்னும் தலைப்பில் கவியரங்கம்., திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கதம்பம்' என்னும் பல்சுவை நிகழ்ச்சி,. கலாலயம் கல்லூரி மாணவிகள் நடாத்தும் பரத நாட்டிய நிகழ்ச்சிகள்,. பட்டாம்பூச்சி குழுவினா் சழங்கும் இன்னிசை நிகழ்வு, அத்துடன் தனி நடிப்புநிகழ்ச்சி, நாடகங்கள், என பல்சுசை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# வேர்களும் முகங்களும்

- டேமியன் சூரி -



1971ம் ஆண்டை இலங்கையர் எவரும் மறக்கமுடியாது. முதன் முதலில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் இலங்கை அரசை கவிழ்க்க சிங்கள இளைஞர்கள் முனைந்த புரட்சிக் காலம். ஜே.வி.பி (செகுவேரா) இயக்கத்தின் தலைவர் றோகண விஜயவீர கைது செய்யப்பட்டு யாழ் கோட்டையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். அந்த ஆண்டின் சித்திரை மாதத்தில் ஜே.வி.பி புரட்சியை நாடாத்தும் என்றோ, யாழ் கோட்டையை கைப்பற்றி தமது தலைவரை மீட்க முயற்சிப்பார்கள் என்றோ யாரும் எதிர்பார்க்கவில்லை. புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு மரியசேவியர் அடிகளார் அதே தினத்தில் வழமையாக வருடாவருடம் அரங்கேற்றும் திருப்பாடுகளின் காட்சியை யாழ் கோட்டை வெளி அரங்கில் மேடையேற்ற திட்டமிட்டார். அவரது திட்டத்தை வழமையாக அவரோடு இணைந்து அவருக்கு உதவிக்கரம் நீட்டும் யாரும் விரும்பவில்லை. காரணம் திறந்தவெளி அரங்கில் 200 மீற்றர் நீளமான மேடையில் எப்படிச்செய்வது? என்றகேள்வி அனைவர் மத்தியிலும் எழும்பி குழப்பிக்கொண்டிருந்தது. ஒளி, ஒலி மற்றும் தொழில்நுட்ப வசதி, மேடைஅமைப்பு, நடிகர்களின் தொகை அதிகரிப்பு, பின்னணியில் நின்று உதவுவதற்கு வேண்டிய பலருடை உழைப்பு, அனைவர்க்கும் குறிப்பிட்ட நேரத்தில் ஒப்பனை, அவர்களுக்கான உடுப்புக்கள், மேடையேற்றத்திற்கு தேவையான பணவசதி இப்படியான காரணங்கள் அனைவர் மத்தியிலும் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அடிகளாரோ 'எவ்வித கலக்கமுமடையத் தேவையில்லை அனைத்தையும் நான் ஒழுங்கு செய்வேன்' பயப்படாமல் வேலைகளை ஆரம்பியுங்கள் என உற்சாகம் தந்தார். அடிகளார் இளம் குருவாக இருந்தது முதல் இன்று வரை பிரம்மிக்கத் தக்க பெரும் திட்டங்களைத் தீட்டுவதோடு அதை நிறைவேற்றியும் வருகின்றார். அதற்காக அவர் பணத்தை சேர்த்து வைத்துக்கொண்டு திட்டங்களை தீட்டுவதில்லை. அவரது கடின உழைப்பும், சோர்விலா முயற்சியும், நம்பிக்கையும், சிறந்த ஆற்றலும் அவரை வெற்றியை நோக்கி முன்னேறச் செய்கின்றது. இன்று இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் அவரது முயற்சியால் செயற்படுத்தப்படும் பல நன்நோக்குத் திட்டங்களே இதற்கு சாட்சியங்கள். அவரை, அவரது சேவையை பாராட்ட வார்த்தைகளே இல்லை. இன்று 'கலைத்தூது' என அழைக்கப்படும் மரியசேவியர் அடிகளார் அன்று கோட்டை வெளியில் திருப்பாடுகளின் காட்சியை நடாத்த தீர்மானித்த அந்த நிகழ்வு அவரது பிரமாண்டமான வளர்ச்சியின் முதற்படி.

பொறுப்புக்கள் பலரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒலி, ஒளியோடு கூடிய தொழில் நுட்பங்கள் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் அதற்கென உரியர்களோடு ஆலோசனை நடாத்தப்பட்டது. அவர்களிடம் இருந்த வசதிகளைக் கொண்டு அந்த நாடகத்திற்கு ஒலிஒளி செய்யமுடியாது என யாவரும் கைவிரித்துவிட்டனர். அதனால் அடிகளார் உடன் கொழும்புக்கு இரயில் ஏறினார். அங்கு மிகப்பிரபல்யமான 'பராக்கிரமாஸ்' என்ற ஒலிஒளி அமைப்பாளர்களை தொடர்பு கொண்டு அவர்களோடு ஒப்பந்தம் செய்தார். ஒப்பனை பிரபல்ய ஒப்பனையாளர் சாமுவேல் பெஞ்சமின் அவர்கள் தலைமையில் ஒப்படைக்கப்பட்டது. அவர் தனக்கு இசைவான ஏனைய ஒப்பனையாளர்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டார். உடுப்புக்கள் முக்கிய பாத்திரங்களுக்கு மாத்திரம் ஒப்பனையாளரால் ஒழுங்கு செய்யப்பட்டது. 200க்கு மேற்பட்ட கலைஞர்கள் நடிகர்களாக பங்குபற்றினர். அதனால் மிகுதிப் பேருக்கான உடுப்புக்களை உருவாக்கும் பொறுப்பை திரு. வி.ஜே. கொண்சன்ரைன் அவர்கள் பொறுப்பெடுத்தார். இதற்காக சாறிகள், சட்டைகள், மற்றும் புதிய சாக்குகள் குருநகரில் சேகரிக்கப்பட்டது. மக்களும் அடிகளாரின் விருப்பத்திற்கேற்ப தாராளமாக வழங்கினார்கள். யாகப்பர் ஆலயத்துள் அமைந்துள்ள திரு இருதயசபை வாசிகசாலையில் இரண்டு தையல் மெசின்கள் வைக்கப்பட்டு இரவு பகலாக உடுப்புக்கள் தைக்கப்பட்டது. ஆண்களும், பெண்களுமாக உடுப்புத் தைக்கத்தெரிந்த பலரும் உதவிசெய்தனர். நாடகத்தை இயக்கும் பொறுப்பை அடிகளாரே மேற்கொண்டார். இசையை எமது இசையமைப்பாளர் எம்.ஜே.தாஸ் பொறுப்பாக நின்று கவனித்தார். மேடையமைப்பு பொறுப்பு கி.மா.நெல்சன் தலைமையில் குருநகர் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் விசேடம் என்னவென்றால் 50 அடி சதுரத்தில் வெள்ளைத் திரை தைக்கப்பட்டது. அதை பலகையிலான பிறேமில் பூட்டி, ஆட்கள் தூக்கி நகர்த்தக் கூடிய விதமாக அடியில் நீளக் கைபிடிகள் இணைக்கப்பட்டது. அந்த வெள்ளைத் திரையில் மேகங்கள் புறொஜக்டர் மூலம் காண்பிக்கப்படும். கோட்டையில் ஒருகாட்சி ஒருகோடியிலும் மற்ற காட்சி இன்னொரு கோடியிலும் நடக்கும். இந்தக்காட்சிமாற்றத்திற் கேற்ப குறிப்பிட்ட நேரத்துக்குள் அந்த வெள்ளைத் திரைத் தட்டியை ஒவ்வொரு இடத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு கிட்டத்தட்ட 20 தைரியமுள்ள இளைஞர்கள் தேவைப்பட்டனர். இதற்கான இளைஞர்கள் குருநகரில் கரைவலைத் தொழில்செய்யும் தொழிலாளர்களில் இருந்து எடுக்கப்பட்டனர். அவர்களுக்கான ஒத்திகையும் நாளாந்தம் கோட்டையில் நடாத்தப்பட்டது. நாடகத்திற்கு தேவையான செலவினைப் போக்க யாழ் ஆயரிடமும், தாராளமனம் கொண்ட வர்த்தகப் பிரமுகர்களிடமும் பணம் சேகரிக்கப்பட்டது. திருப்பாடுகளின் காட்சிபற்றிய விளம்பரங்கள் யாழ்நகர் எங்கும் ஒட்டப்பட்டது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் நாடகத்திற்கு கிறிஸ்தவர்களிடம் மாத்திரமல்லாது இந்துக்களிடமும் பெரும் எதிர்பார்ப்பும் வரவேற்பும் இருந்தது. நாடகத்திற்கு ஒரு நாளுக்கு முன்னர் பராக்கிரமாஸ் பெரிய லொறி ஒன்றில் தமது தொழில்நுட்பப் பொருட்களுடன் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தார். நானும் அந்த நாடகத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக நடித்தேன். முதல் நாள் மேடையில் நாடக மேடையேற்றம் போன்று ஒத்திகை பார்க்கப்பட்டது. அனைத்து பிழை சரிகளும் ஆராயப்பட்டு திருத்தப்பட்டு ஒத்திகை பார்க்கப்பட்டது. அனைவருக்கும் திருப்தி. நாளை 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' மேடையேறவுள்ளது என்ற பூரிப்போடு அனைவரும் 18 மணிநேரம் அதற்காகக் காத்திருந்தோம். (தொடரும்)

## இது என் தேசம்

சமாதானக் காற்று
புயலாகவே
இங்கு
எப்பொழுதும்

சிலுவை அடியில்
தேவமாதாவாய்
அம்மாக்கள்
நாட்டுக்குள்

வேட்டை
போட்டியில்
காட்டுக்குள்
மனிதர்
இடம்பெயரும்
மிருகங்கள்

ஏர்க்கால்
உழுத பூமி
பூட்ஸ் கால்
பட்டு
புழுதியில்

மொட் டவிழா
மலர்கள்
கட்டவிழ்த்து கசக்கப்பட
துவக்கு முனையில்
துர்ப்பாக்கிய
சாந்தி முகூர்த்தங்கள்

வெள்ளைச் சீலை
அதிகம்
விலைபோகும்
தேசமாய் இது

பனையின் வாசம்
தொலைந்து
பல நாள்
இரத்தம் நாறுது

காற்றில்
இயற்கை
முனகிறது
எந்நேரமும்

தவழும் தென்றலை
தழுவ
இங்கு மனிதரில்லை

கத்தும்
குயிலோசையே
தினமும்
காதில் படுகிறது.

இடம்பெயர
இனி
இடமில்லை

புலம்
பெயர்ந்தோர்
பிச்சையில்
பொழுது
போகுது

'அல்வீ'



### நிலவு + காற்று + கடல் = நீ

அன்றொரு நாள்
உனக்காகக் காத்திருந்தேன்
அதுவோர் நிலாப்பொழுது!
முழுமதி தினம் ....
காலம் கடந்தது
உன்னைக் காணவில்லை
நிலாப் பெண்
ஊடல்செய்தாள்
நட்சத்திரங்கள்
கண் சிமிட்டின!
உன்னைக் காணவில்லை.
அருகிலோர்
மணற்றரை
நீ வரவில்லை
நித்திரை வந்தது
அயர்ந்து போனேன்
சற்று நேரம்
கடல் விழித்தது
காற்று தழுவியது
நிலவொளி
அமுதமென்றாயிற்று
இப்போது உன்
காலடியோசை
நெஞ்சில் ஒருவித
தவிப்பு, தகிப்பு
நெருங்கி விட்டாய் நீ!
இப்போது
காற்றும் ஸ்தம்பிதம்
கடல் தூங்கிப் போயிற்று
நிலவு நின்று போனது
எனக்குள் ஒருவித குழப்பம்
காரணம் தேடினேன்.
நிலவும் காற்றும் கடலும்
இப்பொழுது
நீதானே!

அ.பேனாட் - வவுனியா

## இசையமைப்பாளர் **எஸ்.கே. பஞ்சரட்ணம்** அவர்களின் நினைவு நிகழ்வு.

கடந்த 30-12-2006ல் லண்டனில் காலமாகிய மூத்த இசையமைப்பாளர் எஸ்.கே.பஞ்சரட்ணம்அவர்களுக்கான நினைவாஞ்சலிக்கூட்டம் பாரிஸில் வாழ்கின்ற கலைத்துறை நண்பர்களால் கடந்த 11-02-2007 ஞாயிறு தினம் அன்று பாரிசில் சிறப்பாக நடைபெற்றது.

ஈழத்தில் 'பரமேஸ் கோணேஸ்' இசைக்குழுவில் ஆரம்பித்து பின்னர் தானே ஆரம்பித்த 'கலைவாணி இசைக்குழுவிலுமாக பிரபலமான பஞ் அவர்கள் பாரிஸல் வந்த பின்னர் 'கைரோன்' இசைக்குழுவை ஆரம்பித்து தனது வாரிசாக பல மாணவர்களை உருவாக்கியதுடன் தமது இசையமைப்பில் பல குறுந்தட்டுக்களையும் வெளியிட்டிருக்கின்றார் எனபதும் குறிப்பிடத்தக்கது.

# நாடகப் பேராசானுக்கு மீண்டும் கௌரவம்



மதிற்பிற்குரிய திரு.தாசீயஸ் அவர்கள் இன்றைய நவீன நாடக சிந்தனையாளர்களுக்கெல்லாம் தந்தையாக இருப்பவர். 1960களிலேயே நவீன நாடக யுக்திகளைப் பாவித்து இவரது நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட 'பொறுத்தது போதும்' என்னும் நாடகம் பலராலும் வியந்து பேசப்பட்டதாகும்.

மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களது 'புதியதோர் வீடு' 'கோடை' போன்ற நாடகங்களும் திரு தாசியஸ் அவர்களால் நெறியாழ்கை செய்யப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டிருக்கின்றது. மேலும் .காத்தான் கூத்து இசை வடிவத்தில் இவரால் நெறியாழ்கை செய்யப்பட்டு அரங்கேறிய 'கந்தன் கருணை' நாடகம் பல்கலைகழக மாணவர்கள் நாடக கற்கைநெறியாக எடுத்துக் கற்றுக்கொண்ட நாடகம் என்னும் சிறப்பிற்குரியது.

நாடக ஆசிரியராக மட்டும் நில்லாது ஊடகவியலாளராக, அறிவிப்பாளரக, வானொலி, தொலைக்காட்சி இயக்குனராக,வென பல துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்து பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருக்கும் நாடகப் பேராசான் திருவாளர் ஏ.சி. தாசியஸ் அவர்களுக்கு மீண்டுமொருமுறை மிக உயர்ந்த கௌரவம் ஒன்று அவரைத் தேடி வந்திருக்கின்றது.

கனடா ரொறன்ரோவில் உள்ள பல்கலைக் கழகத்தின் தென்னாசிய மையமும் கனேடிய தமிழ்த்தேட்டம் என்னும் அமைப்பும் இணைந்து 2006ம் ஆண்டுக்கான 'இயல் விருது' என்னும் பட்டத்தை வழங்கி கொரவிக்க இருக்கின்றது.

நாடகத்துறையிலும் ஊடகத்துறையிலும் சாதனைகள் பல புரிந்திருக்கும் பேராசான் திரு.தாசியஸ் அவர்களுக்கு கிடைத்திருக்கும் இந்த உயர் விருதின் மகிழ்ச்சியில் 'முற்றமும்' தன்னை முழுமையாக இணைத்துக்கொள்கின்றது.

# அருட்பணிவாழ்வின் 40வருட நிறைவுவிழா



கடந்த 01.05.2007 தொழிலாளர் தினத்தன்று அருட் கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவல் அடிகளாரின் 40வது அருட்பணிவாழ்வின் நிறைவு விழா பாரிசில் வாழும் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்கு மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பாரீஸ் கொன்கூட் தேவ ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய அருட்கலாநிதி அவர்கள் அங்கு உரையாற்றும்போது தமிழ் மக்கள் எங்கே இருந்தாலும் எங்கள் ஊற்றை மறக்காமல், எங்கள் தாயகத்தையும் அங்கு வாழும் மக்களையும் மறக்காமல், அவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களது துன்ப துயரங்களில் பங்குகொள்வதோடு அவர்களுக்காக செபிக்கவும் அவர்களுக்கு வேண்டிய வேளை உதவிகளைச் செய்யவும் தயங்கக்கூடாது என்பதனை வலியுறுத்தினார். திருப்பலி முடிவில் அவர் மக்களால் வாழ்த்தி வரவேற்கப்பட்டதோடு மதிய விருந்துபசாரமும் அவருக்கு அளிக்கப்பட்டது. அவரது 40வருட நிறைவு விழாவின் ஞாபகார்த்தமாக ஒரு சிறப்புமலரும் அன்று வெளியிடப்பட்டது. சிறந்த கல்விமானும், இறையியலாளரும், பல்மொழித் தேர்ச்சிபெற்றவரும், பல நூல்களை எழுதிய எழுத்தாளருமான அருட்கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவல் அடிகளார் தேக ஆரோக்கியத்துடன் தொடர்ந்தும் அருட்பணியாற்ற இறைவனை வேண்டி 'முற்றமும்' அவரை வாழ்த்தி மகிழ்கின்றது.

# தேசிய அரங்கை நோக்கியதேடலின் அவசியம்

-வர்மன்-





ஈழத்தமிழர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகள் இன்று உலகின் பலபாகங்களிலும் மேடையேற்றப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும், புலப்பெயர்வும் தான். ஆனால் இந்நிகழ்வுகளை கண்டு மகிழும் பல்லின மக்களின் மனங்களில் ஈழத்து தமிழ் கலை பற்றி எழும் கேள்விக்கு இன்னும் சரியான பதிலை நாம் கொடுக்கவில்லை. அதாவது ஈழத்தமிழர்களின் அரங்குகளில் நடைபெறும் நிகழ்வுகள் அவர்களது சொந்த கலை அடையாளமா? என்பது தான் இன்றைய கேள்வி. இந்தக்கேள்வி பெரும்பாலும் எழுப்பப்படுவது வெளிநாட்டார் மத்தியில் இருந்து தான். ஏனெனில் நாம் நிகழ்த்தும் கலைகள் யாவும் அவர்கள் பார்த்து இரசித்த இந்திய கலாச்சார பிரதிபலிப்புகளே. அப்படியாயின் எமது ஈழத்து தமிழ் கலைவடிவம் எது? ஒவ்வொரு இனமக்களும், நாடுகளும் தமக்கென தனி கலைஅடையாளங்களை வைத்திருக்கும் பொழுது நமக்கு ஏன் இல்லை? நமது நாட்டில் வாழும் சிங்கள இனமே தனக்கென ஒரு கலை அடையாளத்தை வடிவமைத்து விட்டது. ஆனால் நமக்கென்று ஒர் கலைவடிவம் இன்னும் இல்லை ஏன்? இந்தக் கேள்வி இன்று இலங்கைத் தமிழர் மத்தியில், ஈழத்தமிழருக்கென தேசிய கலைவடிவம் ஒன்றினை எமது பாரம்பரிய கலைவடிவங்களிலிருந்து உருவாக்கும் தேவையை, அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. நமது தேசிய கலைவடிவத்தினை உருவாக்கும் சிந்தனையில் இன்று மாபெரும் கலைஞர்களும், பல்கலைக்கழக அறிஞர்களும், முன்னணி கலை ஆர்வலர்களும் விமர்சகர்களும் முனைந்துள்ள இந்தவேளையில், ஈழ தமிழ் தேசிய கலை வடிவத்தின் உருவாக்கலில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ள தமிழரின் பாரம்பரிய கலைவடிவமான நாட்டுக்கூத்துக்கள் பற்றி கூறி அதன் அவசியத்தை வலியுறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலையகத்திலும் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஆனால் கலைவடிவங்களோ பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபடுகின்றது. எல்லா கலைவடிவங்களும் மதம் சார்ந்து அவரவர் வழிபடும் கடவுள்களின் வணக்கங்களோடும், உற்சவங்களோடும் சார்ந்து இருந்தாலும் அவற்றில் கலைத்துவம் நிறைந்தே காணப்படுகின்றது. கூத்து வடமோடி,தென்மோடி, வடபாங்கு, காத்தான்கூத்து, மாதோட்ட பாங்கு, வாசாப்பு, வட்டுக்கோட்டை கூத்து என பல வகை பெயர்களோடு அழைக்கப்பட்டாலும் பாடல்களும், ஆட்டங்களும்,மேடைகளும், உடுப்புக்களும், முகப் பூச்சுக்களும் ஒவ்வொரு பிரதேச கூத்துக்களிலும் வித்தியாசமானவை. முன்னைய நாட்களில் கூத்துக்களுக்கு கிராம மக்களின் அக்கறையோடு கூடிய வரவேற்பு இருந்தது. அன்று நவீன தொழில் நுட்பங்கள் இல்லாமையால் குரல் வளங்களையும், நடிப்பாற்றலையும் நம்பியே இக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. உயர்ந்த சாரீதத்தோடும் தாளம் பிசகாமலும் ஒரு இராகத்தை சரியாகப் பாடக்கூடியவன் மிகச் சிறந்த பாட்டுக்காரன் எனப் கூறப்பட்டான். இப்படியாக ஒவ்வொரு கிராமத்திலும் பலர் இருந்தனர். அவர்களுக்கென தனி மரியாதை கொடுக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்டனர். இந்த வரிசையில் எனது காலத்தில் அண்ணாவிமார்களாக பூந்தான் யோசெப்பு, குருநகர் பக்கிரிசின்னத்துரை, நட்டுவன் அந்தோனிப்பிள்ளை, சாமிநாதன், மரியதாஸ், பாசையூர் அல்பிறட், பாலதாஸ், பருத்தித்துறை செல்லக்கண்டு தேவசகாயம், நீர்வேலி சுவாம்பிள்ளை, இளவாலை அந்தோனிப்பிள்ளை, ராசாத்தம்பி, மனோகரன், நாவாந்துறை பெலிக்கியான், வின்சன்டிபோல், ஆனைக்கோட்டை குருசுமுத்து, திருச்செல்வம், சின்னராசா, முருங்கன் குழந்தைசெபமாலை, வட்டுக்கோட்டை முருகவேள் போன்றோரை எனக்கு தெரிந்த கூத்து கலைஞர்களாக கூறலாம். இவர்களெல்லாம் கூத்தை அதாவது தமிழரின் பாராம்பரிய கலாச்சாரத்தை வளாப்பதற்காக தமது வாழ்நாளில் கூடுதல் நேரங்களை ஒதுக்கி மக்கள் மத்தியில் அதை வளர்த்ததுமல்லாமல் அடுத்த சந்ததிக்கும் அதை விட்டுச்சென்றனர். காலம் செல்லச்செல்ல நாகரீகத்தின் வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் பல மாற்றங்களை உருவாக்க எம்மவர் தமது சொந்த அடையாளத்தை மறந்து புதிய கலை ஆற்றுகைகளில் தமது புலனைச் செலுத்தினர். கூத்துக் கலையை கேலிசெய்யவும், அதன் கலைஞர்களை ஆற்றாதவன் என அழைக்கவும் முற்படலாயினர். இந்த வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற பலகாலம் எடுத்தபொழுதிலும் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் முயற்சியால் கூத்துக்கலை திரும்பவும் புத்துயிர் பெற்றது.

கூத்துக்கலை எமது பாரம்பரிய சொத்து. கல்வி அறிவு பெரும்பாலான மக்களுக்கு புகட்டப்படாத காலத்தில் இருந்து எமது மக்களால் வளர்க்கப்பட்ட சிறந்த கலைப்பொக்கிசம். அதன்சிறப்பு சொல்லில் அடங்காதது. அதில் ஆடப்படும் ஆட்டங்கள் பிரமிக்கத்தக்கவை. அதனைப் பயிலவும், சொல்லிக்கொடுக்கவும் பல்கலைக்கழக டிப்ளோம் தேவையில்லை. பயிற்சியே அதன் நிரந்தர நிவாரணி. அண்ணாவி என மக்கள் அங்கீகரித்தால் போதும், அவர் அதனை சொல்லிக்கொடுத்து பயிற்றுவிக்கலாம். இத்தகைய கூத்தின் சிறப்புக்களை ஆராச்சியின் ஊடாக எழுத்து வடிவில் வெளிப்படுத்திய பெருமை பேராசிரியர் சு.வித்தியானந்தனையே சாரும். அதன் பிறகு படிப்படியாக வளர்ந்து பல்கலைக்கழக கலைப் பீடத்தின் முக்கிய பாடமாக அரங்கமும் ஆற்றுகையும் இடம்பெறுகிறது. இதில் கூத்து முக்கியமானதாகும். இன்று இலங்கையில் நடைபெறும் இனவிடுதலைப் போராட்டமும், தமிழ் தேசிய உணர்வும் ஈழத்தமிழரின் தேசிய கலைவடிவத்தை தேடும் முனைப்பை அனைவர்க்கும் இயல்பாகவே அளித்துள்ளது.

இதன் அவசியத்தை உணர்ந்த யாழ் திருமறைக்கலாமன்றம் 2004 ம் ஆண்டில் 'நாட்டுக்கூத்தின் எதிர்காலமும் தேசிய அரங்கை நோக்கிய தேடலும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடாத்தியது. இக்கருத்தரங்கில் கலைஞர்களும், புத்திஜீவிகளும், அண்ணாவிமார்களுமாக யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, மட்டக்களப்பு, மலையகம் என தமிழர் பிரதேசங்களிலிருந்து பலர் கலந்துகொண்டு தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர். அவர்கள் சிலரின் கருத்துக்களை கீழ் தருகின்றேன்.

## 'எமக்கு யார் அதிகாரந் தந்தது'....?

'...... யாழ்ப்பாணக் கலாச்சாரம் என்றால் கந்தபுராணக் கலாச்சாரம் என்று சொல்லுகின்ற ஒரு ஆபத்தான கருத்தாக்கத்தை ஏற்கப்போகின்றோமென்றால் தமிழ்தேசிய நாடக வடிவமென்ற ஒரு வடிவத்தைப் பற்றி நாம் பேசலாம். ஆனால் யாழ்ப்பாணத்திலேயே பல கலாச்சாரங்கள் உள்ளன. அதேபோலத்தான் ஒவ்வொரு பிரதேசத்திலும் பல்வேறு கலாச்சாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக மட்டக்களப்பிலே சீலாமுனை, கன்னன்குடாப் பிரதேசங்களை எடுத்தாலும் இரண்டிற்கும் மத்தள அடி தொடக்கம் வேடஉடைகள் வரை பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே கூத்தை ஒரு ஆய்வுகூடப்பொருளாக நோக்குவது அபத்தமானது. இது நல்ல கூத்து என எதனை நாம் தெரியப்போகின்றோம்? எமக்கு அந்த அதிகாரத்தை யார் தந்தது?. ஒவ்வொரு ஊர்க்காரரும் தம்முடைய கூத்தே சிறந்தத என்பார்கள். எனவே கூத்தைப் பற்றி பேசும்போது நேரம், வெளி, பற்றிய எண்ணக்கரு பிரக்ஞை முக்கியமானது. வெறுமனே ஆடலும் பாடலும் மட்டும் கூத்து அல்ல...அதற்கு பின்னால் பல பண்பாட்டம்சங்கள் கலந்திருக்கின்றன. எனவே நாம் எதனை எடுக்கப் போகின்றோம்... தேசிய வடிவம் பற்றி பேசுகின்றோம்... தேசிய அடையாளம் பற்றி பேசுகின்றோம்... நடுத்தரவர்க்கத்தின் அடையாளங்கள் மட்டும் தேசிய அடையாளமாகிவிடுமா...**?»**

சி.ஜெயசங்கர்,
மட்டக்களப்பு

## 'எங்கள் நாட்டுக்கூத்தினை நாங்கள் மாற்றப்போவதில்லை'

..'எனக்கு இப்போது 78 வயது. 13வயதில் இருந்து கூத்தில் ஈடுபட்டு வருகின்றேன். 65 வருடங்களாக என்னுடைய காலம் கூத்துடன் சென்றுகொண்டிருக்கின்றது. பப்பிரவான் நாடகம், விராடநாடகம், வாளாபிமன்னன், குருகேத்திரன் நாடகம் ... எனப்பல நாடகங்களை நாம் ஆடிவந்திருக்கின்றோம். .. இவற்றை நாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் படச்சட்ட அரங்கிலோ, திறந்தவெளி அரங்கிலோ மேடையேற்றியது கிடையாது. அதற்கெனவுள்ள வட்டக்கொட்டகையிலேயே ஆடிக்கொண்டு வருகின்றோம். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கூத்தாடி அம்மன்கோயில் குளிர்த்தி அல்லது வேள்வியில் சோடனைபோட்டுச் செய்து காட்டுவோம். கடந்த 250 வருடங்களாக பரம்பரை பரம்பரையாக நாங்கள் இதனை ஆடிவருகின்றோம். எந்தக் காரணம்கொண்டும் நாங்கள் அதிலுள்ள பாட்டைக்கூட மாற்றமாட்டோம். வேறு மேடைகளிலும் ஆடமாட்டோம். அது அந்த இடத்தில் இருக்கும்போதுதான் அதுவாக இருக்கும். மாறியவடனே கெட்டுப்போகும்.'

அண்ணாவியார் முருகவேள்
வட்டுக்கோட்டை

## ' எமக்குப் பொதுவான ஒரு வடிவம் தேவை...'

"...பல தேசியங்கள் இருக்கட்டும். ஆனால் எமக்கு இன்று ஒரு அரசியல் தேவை இருக்கிறது. தமிழர்களுக்குப் பல தேசியங்கள் இருக்கலாம். யாழ்ப்பாணத்திலேயே வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் என பன்முகப்பிரிவுகளும், தனித்துவமான கலாச்சாரங்களுமுள்ளன. இபபிரிவுகளுக்கூடாக நாம் சிதறுண்டு போகப்போகிறோமா? இன்று எங்களுக்கொரு தேவை இருக்கிறது. அது காலத்தின் தேவை அதாவது ஒரு அரசியல் தேவை உள்ளது. அரசியல் என்பது தற்போதய ஆட்சி அதிகார அரசியல் நிலையில் அல்ல. பரந்த அளவில் தமிழ் பேசும் மக்கள் என்ற பெரிய தொடர்பில் ஒன்றுபடவேண்டிய தேவை உள்ளது. எனவே எமக்கு பொதுவான ஒரு வடிவம் தேவை. அது மத்தியதர வர்க்கத்தை அதிகம் பிரதிபலித்து நின்றாலும் பரவாயில்லை. அந்த வடிவத்தை நாம் கண்டுணரவேண்டும். வெறும் எலும்புக்கூட்டை வைத்தே டயனோசரஸ் என்ற விலங்கை கண்டுபிடித்தார்கள். இங்கு எமது கூத்தில் எலும்புக்கூடு அல்ல. முக்கால்வாசி உருவம் கிடைக்கிறது. அதனை முழுமைப்படுத்த வேண்டும்.'

கந்தையா ஸ்ரீகணேசன்
வவுனியா.

## 'கூத்தை பல மூலங்களில் இருந்து வடிவமைக்க வேண்டும்'

□... எவ்வாறு யக்ஸகானமும், கதகளியும், கர்னாடகம், கேரளத்திற்கென்றுற தெசிய வடிவமாக மாறியது...? ரி.வி.கரந் அவர்கள் அதுபற்றிய ஆய்வை பெரிய புத்கமாக வெளியிட்டுள்ளார். அவர் எப்படி யக்ஸகானத்தை கிராமங்களில் மிகவும் சிதைவடைந்து போன நிலையில் இருந்து இந்த நிலைக்கு கொண்டுவந்தார் என்ற அவரது அனுபவம் எமக்கு மிகச் சிற்ந்த உதாரணமாக நிற்கின்றது. அவர் தனியே யக்ஸகானத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதனைச் செய்யவில்லை. தமிழகத் தெருக்கூத்து, கூடியாட்டம், கதகளி இவற்றில் இருந்து தான் அவர் மூலங்களை எடுத்துக்கொண்டதாகக் கூறுகிறார். அவர் எல்லா வகையிலும் அதற்கான மூலங்களைப் பெறுகின்றார். குறிப்பாக அவர் யக்ஸகானத்துக்குரிய ஆகாரியத்தை (உடை, ஒப்பனை) வடிவமைப்பது பற்றி மிகுந்த கவனம் செலுத்தினார். அதன் புஜக்கட்டை, உடைகள், கிரீடம், ஒப்பனை எல்லாமே எங்கெங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான முழுவிடயத்தையும் தெளிவாக வெளிப்படுத்தியுயள்ளார்....

அவ்வாறே கதகளியும் மக்களின் விருப்புக்கேற்ப தான் ஆடப்பட்டு வந்தது. கேரளாவை மீட்டெடுப்பது என்ற கம்யூனிசுகளின் சிந்தனைக்குப் பின்னர் கிருஸ்ணராட்டம், தேவராட்டம், கூடியாட்டம் போன்றதான பல மூலங்களிலிருந்து எடுத்தாளப்பட்ட விடயங்களில் இருந்துதான் இன்றைய கதகளி வடிவமைக்கப்பட்டது. அன்றைய பழைய கதகளி இன்று இல்லை. எங்காவது கிராமங்களில் சில இடங்களில் மட்டும் ஆடப்படுகின்றது. ஆனால் பரவலாக ஆடப்படுகின்ற இன்றைய கதகளி ஆடல், பாடல், வேடஉடை, ஒப்பனை எல்லாமே பல மூலங்களில் இருந்து பெறப்பட்டு வடிவமைக்கப்பட்டதே. 'ஈழத்துக்கூத்து' என்பதும் இவ்வாறு தான் வடிவமைக்கப்படவேண்டும்.

பாலசுகுமார்
மட்டக்களப்பு

இப்படியாக பல பிதேசங்களைச் சேர்ந்த கூத்துக் கலைஞர்களும், கல்விமான்களும், அண்ணாவி மார்களும் வித்தியாசமான கருத்துக்களை தெரிவித்திருந்தாலும், கந்தையா ஸ்ரீகணேசன் கூறுவதுபோல □எமக்கு இன்று அவசர அரசியல் தேவை இருக்கிறது. எமக்குள் பன்முக பிரிவுகளும், தனித்துவமான கலாச்சாரங்களும் இருக்கலாம். ஆனால் எமது தேசிய கலைவடிவத்தை தமிழர் என்ற ஓரணியில் நின்று நாம் உருவாக்கியே தீரவேண்டும்□. இதுவே இன்று காலத்தின் கட்டாயம். அதுவே அந்த அரசியல் தேவை. எமது எதிர்கால சந்ததியினர் தமிழரின் அடையாளமாக ஒரு பொதுவான கலைவடிவத்தை பேண இது அவசியமாகின்றது. இதற்காக தம்மை அர்ப்பணித்து இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகின்றேன். திருமறைக் கலாமன்றமும் தமது முயற்சியை கருத்தரங்கோடு நிறுத்திக்கொள்ளாமல் அதற்கு செயல்வடிவம் கொடுக்க முனைப்போடு முன்வருதல் வேண்டும். இன்று புலம் பெயர் மண்ணில் வாழும் கலைஞர்களும் எமது பாரம்பரிய கூத்துவடிவங்களை சுவைகுன்றாது, இளையோரும் இரசிக்கக் கூடிய விதமாக புலம்பெயர் நிகழ்வுகளில் இணைக்க முன்வரவேண்டும். பலர் இன்று ஐரோப்பாவில் இதற்காக தங்களை அர்ப்பணித்தாலும் அதனது வீச்சு காணாமலே உள்ளது. எம் இளைஞர்கள் மத்தியில் எமது கூத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை கூத்தின் பால் ஈர்க்கவேண்டும். அப்பொழுது தான் நாளை உருவாக இருக்கும் புதிய கலைவடிவம் புலம்பெயர் மண்ணில் ஏற்கப்பட்டு ஆடப்படுவதுடன் எமது தேசிய கலைவடிவத்தை பிறநாட்டார் அறியும் வண்ணம் பறைசாற்றவும் முடியும். எனவே எமது தேசிய கலைவடிவத்தை பேணுவதில் ஒன்றுபடுவோம். அதற்காக எம்மை அர்ப்பணிப்போம்.

\- வர்மன் -

(உசாத்துணை - ஆற்றுகை 12)

# கவிதை சிந்தும் கண்ணீர்
# கவிதை நூல் வெளியீட்டு விழா

தமிழ்ச்சோலைக் கல்லூரியின் ஆசிரியரும் கவிஞருமான திரு பாஸ்க்கரன் அவர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக எழுதி பத்திரிகைகள் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகளில் பாடிய கவிதைகளுடன் மேலும் பல கவிதைகளையும் இணைத்து கவிதை சிந்தும் கண்ணீர்' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

இக் கவிதை நூலின் வெளியீட்டு விழா கடந்த 25-02-2007ல் பாரிஸின் புறநகாப் பகுதியான போத்திப் பரிஸ் என்னும் இடத்தில் எழுத்தாளரும் நாடகாசிரியுரமான திரு.எம். அரியநாயகம் அவர்களின் தலமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது

இருநூறு ஆசனங்களுக்கு மேல் உள்ள அந்த மண்டபம் இருக்கைகள் நிரம்பி ஏராளமானவர்கள் பின்வரிசையில் நின்றும் விழா நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டது இலக்கிய நிகழ்வு ஒன்றுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகின்றது.

---

# கவிஞர் வில்வரெத்தினம் அவர்களிற்கு பாரிஸில் அஞ்சலி நிகழ்வு.



சாஜகான் அழுதான் தாஜ்மகால் பிறந்தது!
சீதை அழுதாள் இராமாயணம் பிறந்தது!
திரௌபதை அழுதாள் மகா பாரதம் பிறந்தது!
கண்ணகி அழுதாள் சிலப்பதிகாரம் பிறந்தது!
யூதர்கள் அழுதார்கள் இஸ்ரவேல் பிறந்தது!
இன்று தமிழர்கள் அழுகின்றார்கள்!

தமிழர்களின் இந்த அழுகைக்குப் பின்னால் உள்ள கண்ணீர் தமிழீழம் என்னும் புதிய தேசத்தை உருவாக்கும். இந்தக் கருத்தை, தான் எழுதிய கவிதைகள் மூலமாக உணர்த்திவிட்டுச் சென்றிருக்கின்றார் நாட்டுப்பற்றாளர் கவிஞர் சு. வில்வெரத்தினம் அவர்கள்.

கடந்த 04-03-2007ல் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ாரிஸில் நடைபெற்ற அமரர் சு.வில்வரெத்தினம் அவர்களின் அஞ்சலி விழாவில் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்ட கல்விமான் சி.காராளபிள்ளை அவர்கள் உரையாற்றும்போது இப்படியாகக் குறிப்பிட்டார்.

பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் நினைவுரையாற்றிய இவ் விழாவில் யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் வரிவுரையாளரும் தற்பொழுது டென்மார்க்கில் வாழ்ந்து வருபவருமான கலைஞர் ஆதவன் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆமரர் சு.வி. அவர்களின் நினைவுகளைத் தாங்கிய விவரணச் சித்திரம் ஒன்றும் திரையிடப்பட்து. இவ் விவரணத்தில் பிரான்ஸில் வாழ்கின்ற புங்குடுதீவு மக்களின் கருத்துக்களுடன் அமரரின் இறுதிச்சடங்கு நிகழ்வுகளும் இணைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் திரு.ஆதவன் அவர்களின் நெறியாள்கையிலான கவிதாஞ்சலி நடனங்களுடன் அமரரின் 'விடுதலை முகம்' நூலின் அறிமுகமாக 'கோடையும் மழையும்' என்னும் நாட்டிய நாடகமும். மற்றும் 'நான் ஒரு கரப்பான் பூச்சி' 'மேடின் சிறீலங்கா' போன்ற நாடகங்களும் அரங்கேற்றப்பட்டது. நிகழ்ச்சிகளை புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் செயலாளர் திரு.அரியரட்ணம் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

## அருட் பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார்

புலம்பெயர் மண்ணான பிரான்சில் தமிழ் கத்தோலிக்க குருவாக அருட்பணயாளர் அந்தோனிப்பிள்ளை றொபட் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டார் என்ற செய்தி மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இலங்கை யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த றொபட் அவர்கள் அகதியாக பிரான்சில் புகலிடம் பெற்று தன் குடும்ப வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்து பல காலம்வேலைசெய்து வந்தவர். இடையில் இறைவனின் பணிக்காக தன்னை அர்ப்பணிக்க விருப்பம்கொண்ட றொபட் அவர்கள் அருட் பணியாளர் செபமாலை துரம் அ.ம.தி ஆன்மீகப் பணியாளராக பிரான்சில் இருந்தபொழுது அவரது ஆசீருடன் குருமடத்தில் இணைந்து கொண்டார். பிரெஞ்சு மொழியுடன் இறையியலையும் கற்றுத்தேர்ந்த றொபட் அடிகளார் திருச்சபையின் அமலமரித் தியாகிகள் சபையின் குருவாக 21.04.2007 ல் கிறீத்தல் ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பிரான்சில் தமிழர் ஒருவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டமை இத்துடன் இரண்டாவது நிகழ்வாகும். இலங்கைத் தமிழ் கத்தோலிக்க வட்டத்தில் இது மிகவும் மகிழ்ச்சிக்குரியதும் போற்றதற்குரியதுமாகும். அவர் தான் தேர்ந்தெடுத்த மிகக் கடினமாக பணிவாழ்வை இறையாசீருடன் மகிழ்ச்சியோடு நிறைவேற்ற, அருட் பணியாளர் றொபட் அவர்களின் குடும்பத்தார் உறவினர்கள் கத்தோலிக்க திருச்சபை ஆகியவற்றுடன் இணைந்து □முற்றம்□ சஞ்சிகையும் தனது பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றது. அருட் பணியாளர் அ.றொபட் அவர்களைப் பாராட்டி திரு இசிதோர் பெர்ணாண்டோ அவர்கள் எழுதிய சில கவிதைத் துளிகள்

பொதுவாழ்வைத் துறந்து புதுவாழ்வாம்
அருள் வாழ்வை அலங்கரிக்கும் இந்நாள்
ஈன்ற பொழுதினில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோனாய் காணும் தாய்.



## 'பாரிசில்'நூற்றாண்டு விழா கொண்டாடிய
# இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி

யாழ்ப்பாணத்தின் மிகவும் பழமை வாய்த கல்லூரியில் ஒன்றும் பல அறிஞர்களையும், கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும், உருவாக்கிய பெருமைக்குரியதுமான 'இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி'யின் நூற்றாண்டு விழாவை பாரிஸில் உள்ள மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் கடந்த 8-4-2007 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்

விழா நடந்த தினம் கிறிஸ்த்தவ மக்களின் புனித தினமான 'ஈஸ்ற்றா' தினமாக அமைந்திருந்ததால் விழாவிற்கு வருகை தந்த மக்களின் வசதி கருதி விழா மண்டபத்திலேயே ஈஸ்ற்றர் தின சிறப்புப் பூசையுடன் விழா ஆரம்பமாகியது.

மேற்படி கல்லாரியின் தற்போதைய அதிபராக இருக்கும் வணபிதா க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருந்ததும் கல்லூரியின் பழைய மாணவர்களில் இன்று நாடு போற்றும் கலைஞர்களான அமரர் சில்லையூர்-செல்வராசன் கலைஞர் தாசியஸ் கலைஞர் முகத்தார்-யேசுறட்ணம் போன்ற கலைஞர்களில் முகத்தார்-யேசுறட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராக மேடையில் அமர்ந்திருந்ததும் விழாவிற்கு மகுடம் வைத்தது போல் இருந்தது.மேலும் கல்லூரியின் பழைய மாணவர்களான சின்னக்குட்டி ரி.தயாநிதி. மற்றும் கலைஞர் திரு.மோகன் ஆகியோரும் இவ் விழாவில் கௌரவிக்கப்பட்டிருந்தார்கள்.

ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இவ் விழாவில் அனைவர்க்கும் இராப்போசன விருந்து வழங்கியதுடன் நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளிடப்படதும் குறிப்பிடத்தக்கது.




GROUPE PIERRE IMMO Suthan Tél. : 06 10 04 95 42

நியாயமான விலைக்கு உங்கள் வீட்டை விற்க விரும்புகின்றீர்களா?
அல்லது உங்களுக்கென்று ஒரு அமைதியான சொந்த வீட்டை வாங்க விரும்புகின்றீர்களா?
எதுவாயினும் தொடர்புகொள்ளவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்...

Appartement à Aubervilliers
12mn. de Métro : quatre chemins
2 Chambres,séjour,cuisine
salle de bain et wc, cave
60m2 habitable charge 130€/mois
Prix 165000Euros

Appartement à Colombes
5mn. de Porte d'Asnières
3 Chambres,séjour,cuisine
1 salles de bains et wc,
80m2 habitable charge 150€/mois
Prix 195000Euros

Appartement à Epinay S/Seine
10mn. de la Gare
3 Chambres,séjour,cuisine
salle de bain et wc, cave
67m2 habitable 120€/mois
Prix 183000E

PIERRE IMMO Tél. : SUTHAN 06 10 04 95 42 - WWW.123AVENDRE.COM மேலும் இவ்வீடுகளுக்கான கடன் வசதிகளும் செய்துதரப்படும்.

www.paristamil.com Paristamil .Com பரிஸ் தமிழ் வழி காட்டி